# தமிழ்

## அணிகள்

# 12

பெயர்:_________________________.

பிரிவு:_________________________.

பள்ளி:________________________.

அபிமன்னன் & அபிணேஷ்குமார்

www.Padasalai.Net

# 1.<u>நிரல் நிறை அணி</u>

## அணி இலக்கணம்:

*சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி அவ்வரிசைப் படியே பொருள் கொள்வது நிரல்நிறை அணி அகும்.

## சான்று:

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

## சான்று விளக்கம்:

* இல்வாழ்க்கையின் அன்பும் அறமும் உடையதாக விளங்குமானால், அந்த வாழ்க்கையின் பண்பும் பயனும் அதுவே ஆகும்

## அணி பொருத்தம்:

*அன்பு, அறன் என்பவற்றை வரிசையாக நிறுத்தி அவற்றோடு தொடர்புடைய பண்பு, பயன் என்பவற்றை முறையே அடுத்த வரிசையில் இணைத்து, பொருள்

www.Padasalai.Net

கொள்ளுமாறு அமைக்கப் பெறறுள்ளது . எனவே இக்குறட்பாவில் நிரல்நிறை அணி பயின்று வந்துள்ளது.

# 2.பொருள் வேற்றுமை அணி:

## அணிவிளக்கம்:

*செய்யுளில் இருவேறு பொருள்களுக் கிடையே ஒற்றுமையை முதலில் கூறியப்பின் ஒன்றிலிருந்து மற்றொன்றை வேறுபடுத்திக் காட்டுவது பொருள் வேற்றுமை அணி எனப்படும்.

## சான்று:

ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் -ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது
தன்னே இலாத தமிழ்.

## சான்று விளக்கம:

| கதிரவன் | தமிழ் |
|---|---|
| *உயர்ந்த மலைகளுக்கிடையே தோன்றுகிறது | *பொதிகை மலையிலிருந்து தோன்றுகிறது |
| *கடலால் சூழப்பட்ட உலகத்தின் புற | *உலகில் வாழும் மக்களின் அறியாமை |

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

| | |
|---|---|
| இருளைப் போக்குகிறது | என்னும் இருளைப் போக்குகிறது |
| *ஒளிர்கின்ற கதிரவனாக இருக்கிறது. | *தனக்கு நிகரில்லாத தமிழாக இருக்கிறது |

## அணி பொருத்தம்:

* கதிரவனுக்கும், தமிழுக்கும் இடையே உள்ள பயன் சார்ந்த ஒற்றுமையை கூறி, பின் அவற்றுள் தமிழ் தன்னிகரில்லாதது என வேறுபடுத்தி காட்டப்பட்டுள்ளதால் இது பொருள் வேற்றுமை அணி ஆயிற்று.

## 3.<u>ஏகதேச உருவக அணி</u>:

### அணி விளக்கம் :

செய்யுளில் இரு பொருட்களுள், ஒன்றை மட்டும் உருவகம் செய்து மற்றொன்றை உருவகம் செய்யாமல் விட்டு விடுவது ஏகதேச உருவக அணி ஆகும்.

## சான்று:

சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்

ஏமப் புணையைச் சுடும்.

## சான்று விளக்கம்:



www.Padasalai.Net

சினங்கொண்டவரை அழிக்கக் கூடியதாகச் சினமென்னும் தீயே இருப்பதால், அது அவரை மட்டுமின்றி, அவரைப் பாதுகாக்கும் சுற்றத்தையும் அழித்துவிடும்.

## அணிபொருத்தம்:

சினத்தை நெருப்பாகவும், இனத்தைத் தெப்பமாகவும் உருவகம் செய்த வள்ளுவர், உலக வாழ்க்கையைக் கடலாக உருவகம் செய்யாமல் விட்டுவிட்டார். எனவே, இது ஏகதேச உருவக அணி ஆயிற்று.

# 3.தொழில் உவமை அணி:

## அணிவிளக்கம்:

செய்யுளில், ஒரு பொருளின் தொழில் அல்லது செயல் காரணமாக அமையும் உவமை தொழில் உவமை அணி எனப்படும்.

## சான்று :

அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்.

## சான்று விளக்கம்:

மனம் மாறுபடும் இயல்புடைய ஆட்சியாளரைச் சார்ந்து பழகுவோர், அவரிடம் கிட்ட நெருங்காமலும்

விட்டுவிலகாமலும், நெருப்பில் குளிர்காய்கின்றவர் போல நின்று பழகுதல் வேண்டும்.

## அணிபொருத்தம்:

தீக்காய்தல் என்னும் செயல் தொா)ழில்( அரசரோடு பழகுவதற்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது. எனவே, இது தொழில் உவமை அணி ஆயிற்று.

## 4.உவமை அணி:

### அணிவிளக்கம்:

உவமை ஒரு தொடரா கவும், உவமேயம் ஒரு தொடராகவும் அமைந்து உவம உருபு வெளிப்படையாக வருவது உவமை அணி ஆகும்.

### சான்று:

உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடனுறைந் தற்று.

### சான்று விளக்கம்:

அகத்தில் உடண்பாடு இல்லா தவருடன் குடிவாழும் வாழ்க்கை , ஒரு குடிசையில் பாம்போடு வாழ்தல் போன்றது.

### அணிபொருத்தம்:

| | |
|---|---|
| **உவமை** | குடங்கருள் பாம்போடு உடனுறைதல் |
| **உவமேயம்** | உடம்பாடு இலாதவர் வாழ்க்கை |
| **உவம உருபு** | அற்று |
| | |

உவமை ஒரு தொடராகவும் மற்றும் உவமேயம் ஒரு தொடராகவும் அமைந்து, உவம உருபு அற்று வெளிப்படையாக வந்துள்ளது. எனவே, இது உவமை அணி ஆயிற்று.

www.Padasalai.Net